T-UN-277

பாரதியும் தொழிலாளரும்

நா. வானமாமலை எம்.ஏ.,எல்.டி.,

நியூசென்சுரி புக்ஹவுஸ் பிரைவேட் லிட்.,
6, நல்ல தம்பி செட்டித் தெரு
சென்னை-2

முதற் பதிப்பு : பிப்ரவரி, 1964
உரிமை பதிவு

விலை : 0—50 ந.பை.

அச்சிட்டவர் :
மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ்
சென்னை - 2

பொருளடக்கம்

			பக்க எண்
1.	தமிழ்க் கவிஞர் மரபு	...	5
2.	பாரதியின் புதுமை	...	8
3.	பாரதியும் தொழிலாளர் இயக்கமும்	...	11
4.	பெண் விடுதலை	...	28
5.	முடிவுரை	...	33

1. தமிழ்க் கவிஞர் மரபு

"உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்!"

என்று பாரதியார் பாடினார். தமிழ்க் கவிஞர் பரம்பரையில் கடைசியாகத் தோன்றிய பாரதி தம்முடைய முன்னோர்களின் வழியில் சென்றுதான் இவ்வாறு பாடியிருக்கிறார்.

புறநானூற்றுப் புலவர்கள் முதல், பாரதி ஈறாக உழவையும் தொழிலையும் போற்றாதவர் இல்லை. உழவனது வெற்றியை, அரசனது வெற்றியைப் போலவே கொண்டாடினார்கள். சங்கப் புலவர்கள் அரசனை நோக்கி உழவுத்

தொழிலுக்கு ஆதரவு அளிக்க வேண்டினர்கள். மக்களுக்கு உழவுத் தொழிலின் மேன்மையை விளக்கி, அத்தொழிலில் ஈடுபட்டோருக்கு ஊக்கம் அளித்தார்கள்.

வெள்ளைக்குடி நாகனர் என்னும் புலவர் கிள்ளிவளவன் என்னும் சோழ மன்னனை,

பொருபடை தரூஉம் கொற்றமும் உழுபடை
ஊன்றுசால் மருங்கின் ஈன்றதன் பயனே,
மாரிபொய்ப்பினும், வாரி குன்றினும்
இயற்கையல்லன செயற் கையிற்றேன்றினும்
காவலர்ப்பழிக்கும் இக்கண்ணகன் ஞாலம்.
அது நற்கறிந்தனையாயின் நீயும்
நொதுமலாளர் பொதுமொழி கொள்ளாது
பகடு புறந்தருநர் பாரமோம்பிக்
குடி புறந் தருகுவையாயின்
அடிபுறந்த ருகுவர் அடங்காதோரே.

என்று பாடுகிறர்.

பகைவர் படை கொண்டு நாட்டினுள் நுழைந்தால், அவர்களை எதிர்த்துப் போரிட்டு புறங்கொடுத்து ஓடச் செய்த வெற்றி, உழுகின்ற கலப்பையை நிலத்தில் ஊன்று சாலிடத்து விளைந்த நெல்லினது பயன். மழை பெய்யாது ஒழியினும், விளைவு குறையினும், விபரீதங்கள் தோன்றினும், மக்கள் மன்னனையே பழித்துக் கூறுவர்.

இதனை நீ நன்குணர்ந்து பழிமூட்டுவதற்காகக் கோள் சொல்லுவாருடைய சொற்களைக் கேளாது, ஏரைப் பாது காப்பாருடைய குடியைப் பாதுகாத்து அக்காவலால் ஏனைய குடிகளையும் பாதுகாப்பாய் ஆயின் பகைவர் உன் அடியைப் போற்றுவர்.

இப்பாடல் உழவுத் தொழிலின் வெற்றியே நாட்டின் வெற்றி என்று பறைசாற்றுகிறது. உழவுத் தொழில் செய்

வோர் குடியை அரசு பாதுகாத்தல் வேண்டும் என மன்னனுக்கு அறிவுரை கூறுகிறது.

சங்கப்புலவர்கள் காலத்திற்குப் பின் வாழ்ந்த வள்ளுவர், உழவுக்கு ஒரு அதிகாரம் ஒதுக்கினர். உழவின் பெருமையை 'உழவு' என்னும் அதிகாரத்தில் முதல் நான்கு குறள்களில் கூறுகிறார்.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்—அதனால்
உழந்தும் உழவே தலை.

"உழவு ஒழிந்த எல்லா நெறிகளிலும் சுழன்றுதிரிந்தாலும், ஏருடையவர் வழியே வருவர் உலகத்தார்; ஆதலான் வருந்தியும் உழவே தலைமையுடையது."

பாரதியார் தம் உரையில், "பூமியைப் பிரதட்சணம் பண்ணிய தர்மமும் உழவு செய்து கொடுத்த தர்மத்துக்கு நிகரில்லை" என்று கூறுகிறார்.

உழுவார் உலகத்தார்க்காணி—அஃதாற்று
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

"உழவுத் தொழில் அன்றோ உலகம் அசையாமல் தாங்குகின்ற ஆணி; உழவு இல்லாதார் தொழுது வயிறு வளர்ப்பவர்" என்று பாரதியார் உரை எழுதுகிறார்.

இவ்வாறே கம்பனும் உழவைப் போற்றுகிறான். அவனே ஏரெழுபது என்ற சிறு நூலின் ஆசிரியன் என்றும் சிலர் கருதுகிறார்கள்.

பிற்காலத்தில் உழவனைக் காப்பியத் தலைவனாகக் கொண்ட பள்ளுப்பாடல் எழுந்தது.

அவை யாவும் உழவையும், உழவனையும் போற்றுகின்றன.

எனவே பாரதி நமது கவிஞர் மரபையொட்டியே, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று பாடினர்.

உ. பாரதியின் புதுமை

பாரதியின் பாட்டில் அடுத்து வரும் அடிகள்தான் அவருக்கு முன்னிருந்த கவிஞர்கள் பாதையினின்று முன்னேறும் புதிய வழியை மக்களுக்குக் காட்டுகிறது.

"விழலுக்கு நீர் பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக்கு உழைத்துடலம் ஓயமாட்டோம்."

உழவர் தமக்காக உழைக்கவில்லை. நில உடைமையாளருக்காக உழைக்கிறார்கள். அவர்களைப் பாரதி 'விழல்' என்று அழைக்கிறார். பயிர்கள் நடுவே பயன் தராமல் நிலத்தின் சாரத்தை உறிஞ்சிப் பயிர்களை வாடச்செய்யும் களைகளே விழல். "விழலுக்குத் தண்ணீர் இறைக்க மாட்டேன், வீணருக்கு உழைக்க மாட்டேன்" என்று உறுதி

கொள்ளுகிருன், பாரதியின் பள்ளன். இந்த உறுதிதான் பாரதியின் பாட்டிலுள்ள புதுமை. இந்த உறுதிக்கு அடிப்படையான உணர்வுதான் பாரதி காலத்தில் புதிதாகத் தோன்றியது. புதிதாகத் தோன்றிய உரிமை உணர்வு, 'வீணருக்கு உழைக்கமாட்டோம்' என்ற உறுதி, அப்போழுதுதான் நமது நாட்டில் முளை விட்டது. பாரதி முளையிலே செடியையும், மரத்தையும் கனியையும் காணும் தொலை நோக்குடைய கவிஞர். ஆகவே முளைக்கு நீரூட்டி வளர்த்தார்.

தொழிலையும், உழவையும் போற்றினுர். தொழிலாளியையும் உழவனையும் புகழ்ந்தார். அவர்களது நன்முயற்சிகளை வரவேற்ருர்.

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
இயந்திரங்கள் வகுத்திடுவீரே
கரும்பைச் சாறு பிழிந்திடுவீரே
கடலில் மூழ்கி நன் முத்தெடுப்பீரே
அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே
பெரும் புகழ் நுமக்கே இசைக்கின்றேன்
பிரம தேவன் கலையிங்கு நீரே!"

மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே
மரத்தைவெட்டி மனை செய்குவீரே
உண்ணக் காய்கனி தந்திடுவீரே
உழுது நன்செய்ப் பயிரிடுவீரே
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவீரே
இழையை நூற்று நல்லாடை செய்வீரே
விண்ணினின் றெமை வானவர் காப்பார்
மேவிப்பார் மிசைக் காப்பவர் நீரே!

பாட்டும் செய்யுளும் கோத்திடுவீரே
பரத நாட்டியக் கூத்திடுவீரே

நாட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடுவீரே,
நாட்டிலேயறம் கூட்டி வைப்பீரே,
நாடும் இன்பங்கள் ஊட்டி வைப்பீரே,
தேட்டமின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவீர் நீரே!

படைப்புக் கடவுள் பிரமன் என்பர் புராணிகர். பாரதியோ கண் கண்ட பிரமன் தொழிலாளிகளே என்று பாடுகிறார்.

இவ்வாறு அவர்களைத் தெய்வங்களாக்கி கோயிலில் வைத்துக் கும்பிட்டு விட்டு பாரதி அவர்களை மறந்து விடவில்லை. அவர்களது துன்பங்களைக் கண்டார், அவற்றைப் போக்க அவர்கள் ஒன்றுகூடிச் சங்கங்கள் அமைப்பதையும் கண்டார். ஐரோப்பாவில் தொழிலாளர்கள் செய்யும் கிளர்ச்சிகளைப் படித்தறிந்தார். பத்திரிகைச் செய்திகளில் பல பொய்களின் ஊடே உண்மையைச் சலித்து அறிந்தார். தொழிலாளிகள் உலகத்தை மாற்றும் ஒரு சக்தி என்பதை உணர்ந்தார். தொழிலாளரைப் புகழ்ந்து பாடிய பாரதி, அவர்களது நன்முயற்சிகளுக்கு வாழ்த்துப் பாடும் புரட்சிக் கவியாகப் படிப்படியாக மாறினார்.

3. பாரதியும் தொழிலாளர் இயக்கமும்

உலகிலேயே இங்கிலாந்தில்தான் முதன் முதலில் தொழில் வளர்ச்சி ஏற்பட்டது. முதலாளித்துவம் வளர்ச்சி பெற்றது. தொழிலாளி வர்க்கம் தோன்றியது. வர்க்க முரண்பாடுகள் தீவிரமடைந்தன. முதலாளித்துவ வளர்ச்சியால் தொழிலாளர் வறுமை வாய்ப்பட்டனர். வாழ்க்கை வசதிகள் இன்றி வாடினர். தமது வாழும் உரிமையை நிலைநாட்ட தொழிலாளி வர்க்கம் ஒன்றுபட்டது. தங்களது ஒரே ஆயுதமான வேலைநிறுத்தத்தை அவர்கள் கைக்கொண்டனர். அதன் பிறகு பிரிட்டிஷ் முதலாளிகள் வேறு

நாடுகளுக்கு தங்கள் மூலதனத்தை ஏற்றுமதி செய்தனர். அங்கங்கே தொழிலாளிகளைச் சுரண்டினர். அந்நாடுகளில் தொழிலாளர் ஒன்றுகூடினர். சுரண்டலை எதிர்க்க கிளர்ச்சி செய்தனர்.

அக்காலத்தில் முதலாளித்துவப் பத்திரிகைகள் வேலைநிறுத்தங்களைக் 'கலகம்' என்று பெயர் சூட்டி அழைத்தன. போல்ஷவிக் சூழ்ச்சியினால்தான் வேலை நிறுத்தங்கள் நடக்கின்றன என்று விஷமப் பிரசாரம் செய்தன. அவற்றையெல்லாம் பாரதி படித்தார். அவற்றின் பொய்ம்மை வலையில் பாரதி சிக்கவில்லை. தொழிலாளர் கிளர்ச்சியின் காரணங்களைத் தெளிவாக அறிந்தார். அவற்றை மக்களுக்கு அறிவிக்கத் தயக்கமின்றி முன் வந்தார்.

பாரதி, உலகெங்கும் தொழிலாளி வர்க்கம் முன்னேறுவதைக் கண்டார். அவர்களுடைய நோக்கங்களைத் தெளிவாகப் புரிந்து கொண்டார். இந்தியாவில் தொழிலாளி வர்க்க இயக்கம் ஆரம்பக் கட்டத்தில்தான் இருந்தது. ஐரோப்பாவில் அது முன்னேறிப் பல வெற்றிகளைப் பெற்று வந்தது. சோஷலிஸம் தனது நோக்கமெனப் பிரகடனம் செய்தது. நம்மை ஆண்டு வந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் நடுநடுங்கிற்று. நமது நாட்டில் இக் கொள்கை தொழிலாளிகளிடம் பரவவிடாமல் பல தடைகளை விதித்தது. பத்திரிகைகள் ஐரோப்பியத் தொழிலாளர் இயக்கங்களைப் பற்றி எழுத விடாமல் எச்சரிக்கையாகக் கண்காணித்தது. தொழிலாளர் இயக்கச் செய்திகளோ, அவர்களது வர்க்கத் தத்துவமோ அச்சில் வராதபடி தடுக்க அச்சகச் சட்டங்களைப் பயன்படுத்தியது.

இந்நிலையில் பாரதி இத்தடைச் சுவர்களை ஊடுருவி தொழிலாளர் இயக்கத்தின் உண்மையான தன்மையைப் புரிந்து கொண்டார். ஐரோப்பிய முதலாளித்துவப்

பத்திரிகைகள் கொடுத்த திரிபுச் செய்திகளை ஊடுருவி உண்மையைக் கண்டார். அவ்வுண்மையை தாம் எழுதிய செய்திக் குறிப்புகளிலும், தலையங்கங்களிலும் வெளியிட அவர் தயங்கவில்லை.

பாரதி தொழிலாளர்-இயக்கம் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்களைத் தொழிலாளிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும் பொதுமக்களும் அறிந்துகொள்ளுதல் அவசியம்.

இக் கருத்துக்கள் முழுதும் நமக்குக் கிடைக்கவில்லை. மிதவாதப் பத்திரிகையான 'சுதேசமித்திரனில்' அவருடைய முழுக் கருத்தையும் வெளியிடச் சில தடைகளிருந்தன. அரசியல்—பொருளாதாரத் துறைகளில் தன்னுடைய தீவிரமான கருத்துக்களை வெளியிட இந்தியா, விஜயா, பாலபாரதம், சூரியோதயம் என்ற பத்திரிகைகளை பாரதி தொடங்கினார். உண்மை கூறும் இப்பத்திரிகைகள் அரசாங்கத் தடைகளினால் நின்று போயின. அவை யாவும் பாண்டிச்சேரியில் நடைபெற்றவை. அவற்றின் பழைய இதழ்களைப் பாண்டிச்சேரி நண்பர்கள் சேகரிக்கக் கூடுமானால், பாரதியின் அரசியல்—பொருளாதாரக் கருத்துக்களை நாம் முழுமையாக அறிந்துகொள்ள முடியும்.

ஆயினும் நமக்கு கிடைத்திருக்கும் பத்திரிகை தலையங்கங்களினின்றும் அவருடைய ஆதரவு தொழிலாளர் இயக்கத்துக்கும் அதன் சோஷலிஸக் குறிக்கோளுக்கும் நிச்சயமாக உண்டு என்பது தெரிகிறது.

வேலை நிறுத்தத்தின் காரணம்

இந்நூலில் அயல்நாட்டுத் தொழிலாளர் இயக்க நிகழ்ச்சிகளைப் பற்றி பாரதி எழுதிய தலையங்கங்களிலிருந்து அவரது சிந்தனைகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். 3—10—20-ஆம் தேதியிட்ட தலையங்கத்தில் பாரதி

"ஸய்யீது துறைமுகத்தில் போல்ஷவிக் உபத்திரவங்கள்" என்ற தலைப்பில் அந்நிகழ்ச்சியைப்பற்றிக் கருத்துத் தெரிவிக்கிறார். ஸையத் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர். அதற்கு முதலாளித்துவப் பத்திரிகைகள், போல்ஷவிக் தூண்டுதலே காரணம் எனக் கூறின. ('போல்ஷவிக்' என்பது ரஷிய கம்யூனிஸ்டுகளைக் குறிக்கும்) அந்நிய நாட்டார் தூண்டுதலால்தான் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்கிறார்கள் என்று உண்மையைத் திரித்துக் கூறுவதே அப்பத்திரிகைகளின் நோக்கம். பாரதி இதை 'சுதேசமித்திரனில்' நேரடியாக மறுக்க முடியாது. ஆயினும் தொழிலாளர் பொருளாதார நிலைமையும், மறைமுகக் கூலிக் குறைப்புமே வேலை நிறுத்தத்துக்குக் காரணம் என்றும், கூலி உயர்வு கிடைத்ததால், வேறு பகுதித் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யவில்லை என்றும் உண்மையை விளக்கிக் கூறுகிறார் பாரதி.

பாரதி மேலும் அதில் எழுதுவதாவது :

"சென்ற அக்டோபர் மாத முடிவில் ஸூயேஸ் கால்வாய்க்கு வடபுறத்தேயுள்ள ஸயீது துறைமுகத்தில பலமான தொழிற்கலகங்கள் நேரிட்டதாக 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்குச் செய்தி கிடைத்திருக்கிறது. ஸூயேஸ் கால்வாய் தொழிலாளிகளைத் தொழில் நிறுத்தும்படி கலகக்காரர்கள் தூண்டியும் அது பலிக்கவில்லை என்று தெரிகிறது. இவ்வாறு பலிக்காமற் போனதற்குக் காரணம் அந்த வேலையாட்களின் சம்பளங்களில் கம்பெனியார் தக்கபடி மிகுதி செய்து கொடுத்ததேயாகும். ஆனால் வேறு சில தொழிலாளிகள் (அக்டோபர் முடிவில்) இன்னும் தொழில் நிறுத்த நிலைமையிலேதான் இருந்தனராம். எகிப்தின் பட்டாளம் ஒன்று ஸய்யீது துறைமுகத்துக்கு வந்திருக்கிறது. கலகக்காரர் சிறையை உடைக்க முயன்றார்களாம். இங்ஙனம் அவ்விடத்தில் குழப்பமேற்

பட்டிருப்பதற்கு போல்ஷவிக் சேஷ்டைகளே காரணம் எனினும், அந்தத் துறைமுகத்தில் வழங்கப்படும் பிரான் (franc) என்னும் பிரெஞ்சு நாணயத்திற்கு விலைமதிப்புக் குறைவு நேர்ந்திருத்தலும் ஒருவாறு காரணமாகுமென்று 'டைம்ஸ்' சொல்லுகிறது. இந்த நாணயத்திலேயே அங்குள்ள வியாபார ஸ்தலத் தலைவர் தங்கள் வேலையாட்களுக்குச் சம்பளம் கொடுக்கும் வழக்கம் இருப்பதாகத் தெரிகிறது''

''டைம்ஸ்'' பத்திரிகையின் முரண்பாட்டை எடுத்துக் காட்டி, ''தொழிற் கலகங்களின்'' உண்மையான காரணத்தை பாரதி சுட்டிக்காட்டுகிறார். வேலை நிறுத்தத்துக்கு உண்மையான காரணத்தைத் தலையங்கக் கடைசியில் அழுத்தமாகக் குறிப்பிடுகிறார். 'தொழிலாளர் வேலை நிறுத்தத்துக்கு நாணய மதிப்புக் குறைவால் ஏற்பட்ட மறைமுகச் சம்பளக் குறைவே காரணம்' என்று பாரதி குறிப்பிடுகிறார். 1920-ல், முதலாளித்துவப் பத்திரிகைகளின் பொய்ப் பிரச்சார இருளை விலக்கி அரசியல் அறிவென்னும் ஒளிபாய்ச்சி பாரதி உண்மையை உலகிற்கு வெளியிடுகிறார்.

வேலையின்மை பற்றி பாரதி

19—1—1921-ல் பாரதி பிரிட்டனில் வேலையில்லாத தொழிலாளரைப் பற்றி ஒரு தலையங்கம் எழுதினார். அத்தலையங்கம் பாரதியின் தெளிவான அரசியல் பார்வைக்குச் சான்றாகக் காணப்படுகிறது. நம்மையாண்டுவந்த பிரிட்டிஷ்காரர்கள் மீது வெறுப்பு வளர்ந்து தேசீய இயக்கம் மாபெரும் கிளர்ச்சியில் ஈடுபடத் தயாராகிக் கொண்டிருந்த காலத்தில் பாரதி பிரிட்டிஷ் தொழிலாளியின் வேலையில்லாத நிலைமை குறித்துக் கவலைப்பட்டு எழுதுகிறார். தொழிலாளிகளின் கோரிக்கைகளை ஆதரிக்கிறார். நம் நாட்டில் வேலையின்மையைப் போக்க யாரும், எவ்வித முயற்சியும் செய்யாததைக் கண்டு மனம் குமுறுகிறார். பிரிட்டிஷ்

தொழிலாளர் இயக்கத்தை நமது தொழிலாளர்களுக்கு முன்மாதிரியாகக் காட்டுகிறார்.

பிரிட்டிஷ் தொழிலாளிகள் நம் நாட்டின் தேசீய இயக்கத்துக்கு விரோதியல்லர். அவர்களது கோரிக்கையை நாம் ஆதரிக்க வேண்டும். அவர்களது போராட்டங்களைப் பார்த்து நமது தொழிலாளிகள் ஒற்றுமைப் பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். இவைதாம் இக்கட்டுரையில் காணப்படும் தெளிந்த அரசியல் ஞானம்.

பாரதியின் தூரப் பார்வைக்கு ஓர் உதாரணமாக விளங்கும் இத் தலையங்கம் முழுவதையும் கீழே தருவோம்:

இங்கிலாந்தில் தொழிலற்றோரின் நிலைமை

தொழிலின்றியிருப்போருக் குள்ளேதான் இங்கிலாந்து போன்ற தேசங்களில், ருஷியக் கொள்கைள் வெகு தீவிரமாகப் பரவி வருகின்றன. பொதுவாக அக் கொள்கைகள் தொழிலாளரைக் குறித்தன. ஆதலால் தொழிலாளரிற் பலர் அக்கொள்கைகளை அங்கீகாரம் செய்கிறார்கள் எனினும், அக்கொள்கைகளை அனுஷ்டானத்துக்குக்கொண்டு வருவதில் தொழிலாளர் காட்டும் சிரத்தையைக் காட்டிலும், தொழிலின்றி, உணவின்றி, வருந்தும் கூட்டத்தார் பலமடங்கு அதிக சிரத்தை காட்டுகிறார்கள். எனவே பொதுவாக ஜனோபகார சிந்தையால் மாத்திரமேயன்றி ராஜ்ய தந்திரத்தின் அவசரங்களாலும் ஐரோப்பிய ராஜதந்திரிகள் தத்தம் நாடுகளில் தொழிலற்றிருப்போருக்கு ஏதாவது நிவாரணம் செய்ய வெண்டுமென்ற அவசியத்துக் குட்பட்டிருக்கிறார்கள். எனவே, இங்கிலாந்தில் தொழிலில்லாதோரைப் பற்றி ராஜாங்கத்தாரால் நியமிக்கப்பட்டிருக்கும் விசாரணை சபையொன்றுளது. அதில் வந்து தம்முடன் கலந்து வேலை செய்யும்படி தொழிற்

சங்கங்களில் ஐக்ய மஹா ஸமாஜத்தாருக்கு ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அழைப்புப் பத்திரமனுப்பினார்கள். அந்த தொழிலாளிகள் இது தம்மால் இயலாதென்று என்று சொல்லி மறுத்துவிட்டார்கள். ஸர்க்கார் கமிட்டி மூலமாக யாதொரு பயன் படக்கூடிய தொழிலும் நடக்காதென்றுணர்ந்த அத்தொழிற் பிரதிநிதிகள் அவ்விஷயமாகத் தம்மால் இயன்ற பரிகாரங்கள் செய்யும் பொருட்டுத் தம்முடைய சொந்த ஆலோசனை ஸமிதியொன்று நியமனம் செய்திருக்கிறார்கள்".

ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாரின் சுருக்கு யோசனை

கவர்ன்மெண்ட் கார்யங்களில் நியமிக்கப்பட்டிருக்கும் தொழிலாளிகளின் வேலை நேரத்தைக் குறைத்தால் அவர்களுக்கும் ஆறுதல் ஏற்படும், தொழிலின்றியிருப்போர் பலருக்கு ராஜாங்கத்தோர் தொழிலேற்படுத்திக் கொடுக்க வழியுண்டாகும். இங்ஙனம் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சொல்லிய உபாயத்தை தொழிற் சங்க பிரதிநிதிகளும், ஸர்க்கார் வேலையாட்களும் நிராகரித்துவிட்டனர். ஏனென்றால், குறைந்த நேரம் வேலை செய்து, தொழிலாளிகள் அதற்குத் தக்கபடி குறைந்த சம்பளம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று கவர்ன்மெண்ட் சொல்லுகிறது. இப்போதுள்ள சம்பளத்துக்குக் கீழே வாங்கினால் ஜீவிக்க முடியாதென்று தொழிலாளிகள் சொல்லுகிறார்கள்.''

இந்தியாவில் தொழிலற்றிருப்போர்

"இங்கிலீஷ் படித்தவர்களுக்குள்ளே குறைவாகவும் அதாவது ஆயிரக்கணக்காகவும், இங்கிலீஷ் படிப்பில்லாதவர்களுக்குள்ளே மிகுதியாகவும் அதாவது லக்ஷக்கணக்காகவும் யாதேனும் தொழில் செய்யுந்

திறமையுமுடையோராயினும், தொழிலகப்படாமல் வறுமைப் பிசாசினால் கிழிப்புண்டு மடிகிறார்கள். ஏனென்று கேட்பாரில்லை. ராஜாங்கத்தார் இந்த விஷயத்தை ஸ்மரிக்கவேயில்லை. ராஜாக்கள் ஜமீன்தார்கள், பிரபுக்கள் இரைக் கருதவில்லை. மடாதிபதிகள், தர்மகர்த்தாக்கள் இதனை ஸ்மரிக்கவில்லை, ஜனத் தலைவர்கள், ராஜ்யதந்திரிகள் இதைக் கருதவில்லை. உபந்யாஸகர்களும், பத்திராதிபர்களும், உபாத்யாயர்களும் இதைப் புறக்கணித்து விடுகிறார்கள். இந்தியாவிலே பசியால் மடிவோரைப் பார்த்திறங்குவாரில்லையா? தெய்வமில்லையா?''

அயல் நாடுகளில் தோன்றிய தொழிலாளர் இயக்கங்களை ஆதரித்த பாரதி நம்நாட்டில் இத்தகைய இயக்கங்கள் வளரவில்லையே என்று வருந்தினர். இவ்வுணர்வையே நாம் மேற்கண்ட கட்டுரையில் காண்கிறோம். 1918ல் நமது நாட்டில் இந்தியா முழுமைக்குமான தொழிற்சங்க மத்திய ஸ்தாபனம் இல்லையென்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தமது நாட்டில் முரண்பாட்டில் சிக்கிக்கொண்ட பிரிட்டிஷ் முதலாளிகள் இந்தியாவில் தொழிற்சாலைகள் அமைத்தனர். மலிவாகக் கூலி உழைப்பாளிகள் கிடைத்ததும் மூலப்பொருள்கள் கிடைத்ததுமே அதற்குக் காரணம். முக்கியமாகப் பஞ்சாலைகளே முதலில் நமது நாட்டில் தோன்றிய தொழில்கள். பம்பாய், ஆமதாபாத், சென்னை, மதுரை, தூத்துக்குடி போன்ற இடங்களில் பஞ்சாலைகள் தோன்றின. இவை யாவும் வெள்ளையருடையனவே. இவற்றைப் பின்பற்றிச் சில தொழில்களை இந்திய முதலாளிகள் ஆரம்பித்தனர். அங்கு நிலமிழந்த விவசாயிகள், தொழிலாளிகளாக வேலை செய்தனர். ஆரம்ப காலத்தில் 15 மணி நேரம் தொழிலாளர் வேலை செய்தனர்.

தொழிலாளர் கடுமையான சுரண்டலுக்கு உள்ளாயினர். முதல் உலக யுத்தத்திற்கு முன்னர் இங்கு பல தொழிற் சாலைகள் தோன்றிவிட்டன. விலை உயர்வு காரணமாகத் தொழிலாளர் அவதியுற்றனர். தாமாகவே சிற்சில தொழிற் சாலைகளில் கொடுமையை எதிர்த்து இணைப்பின்றி போராடினர். அப்போராட்டங்களை பிரிட்டிஷ் அரசின் உதவியோடு வெள்ளை முதலாளிகள் அடக்கிவிட்டனர்.

தேசிய இயக்கம் வளர்ச்சியுறத் தொடங்கிய காலம் அது. பரிபூரண சுதந்திரம் என்ற குறிக்கோள் தோன்றாத காலம் அது. தேசிய முதலாளிகளது கோரிக்கைகளுக்காக வும், மேல்தர வர்க்கங்களின் கோரிக்கைகளுக்காகவும் காங்கிரஸ் கிளர்ச்சி செய்து வந்த காலம் அது. எனவே தொழிலாளர் கிளர்ச்சிகளுக்குத் தேசிய இயக்கம் ஆதரவு கொடுக்கவில்லை.

ஆனால் 1920—ல் தொழிலாளர் இயக்கம் தேசிய இயக் கத்தின் நேச சக்தி என்பதை காங்கிரஸ் தீவிரவாதிகள் உணர்ந்தனர் எனவே, 'இவ்வியக்கத்தின் ஆதரவைப் பெறத் தொழிலாளர் கிளர்ச்சிகளை நடத்தி வந்த தலைவர் களோடு இணைந்து 1920—ல் அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரசைத் தோற்றுவித்தார்கள்.

அதற்கு முன்னர் பம்பாயிலும், சென்னையிலும் தனித்தனியான தொழிற் சங்கங்கள் அமைக்கப்பட்டன. சென்னையில் சிங்காரவேலர், திரு. வி. க. வி. சர்க்கரைச் செட்டியார், வாடியா முதலியோரது முயற்சியால் சென்னைத் தொழிற் சங்கம் அமைக்கப்பட்டது. பாரதிக்கு இத்தலைவர்கள் அனைவரையும் தெரியும். அவர்களது முயற்சிக்குப் பாரதி ஆதரவளித்தார். அவரது நண்பர் வ. உ. சிதம்பரம் பிள்ளை தூத்துக்குடியில் 'காரல் மில்' தொழிலாளர் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கினார். தொழிற் சங்கமும் அமைத்தார். இவையனைத்துக்கும் பாரதியின்

ஆதரவு உண்டு. இவற்றைக் குறித்துப் பாரதி 1918-ல் கீழ் வருமாறு எழுதுகிறார்.

"இப்பொழுது நமது நாட்டில் அங்கங்கே பல தொழிற்சங்கங்கள் ஸ்தாபனம் செய்யப்பட்டு வருகின்றன. இச்சங்கத்தார்கள் சம்பள ஏற்றத்துக்கும் வேலை நேரத்தை குறைப்பதற்கும் வேண்டிய யத்தனங்கள் செய்து வருகிறார்கள். இந்தப் பிரயத்தனங்கள் எல்லாம் முற்றிலும் நியாயமே. இதில் ஐயமில்லை".

தொழிற் சங்கங்களின் கடமைகளை வரையறுத்துக் கூற முன்வந்த பாரதி, அவர்களைக் கல்வி கற்றுக்கொள்ள வேண்டுமென உபதேசிக்கிறார். "தொழிலாளிகளின் எல்லாப் பிராயத்தினரும் சென்று கல்வி பயிலுவதற்குரிய பகற் பள்ளிகளும் இரவுப்பள்ளிகளும் அமைக்கவேண்டும்." இவ்வாறு பாரதி எழுதினார்.

இது மிகவும் முற்போக்கான கருத்தாகும். தொழிலாளர் முன்னேறவும், அரசியல் பயிற்சி பெறவும் கல்வியே அடிப்படை. அத்தகைய பயிற்சியை நம் நாட்டுத் தொழிலாளர் பெறவேண்டுமெனப் பாரதி விரும்பினார். இன்றும் இக்கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டியதாகவுள்ளது.

தொழிலாளி வர்க்கமும் அரசியல் அதிகாரமும்

தொழிலாளி வர்க்கம் தம்முடைய வாழ்க்கை வசதிகளுக்காக மட்டுமின்றி அரசியல் அதிகாரத்துக்காகவும் போராடுவதை பாரதி தெளிவாகக் கண்டார். இப் போராட்டம் பற்றி அவர் தமது கருத்துக்களை 'தொழிலாளர் பெருமை' என்ற கட்டுரையில் பின்வருமாறு கூறுகிறார்.

"ஐரோப்பிய நாடுகளில் தொழிலாளர்களுக்கும் முதலாளிகளுக்கும் இடையே ஏற்பட்ட வேற்றுமைகள் இப்பொழுது மிகவும் முற்றிப்போய்விட்டன.

இந்நிலையில் அவ்விரண்டு கட்சிகளுக்குமுள்ள மனஸ்தாபங்களை யெல்லாம் தீர்த்து அவர்களில் ஒரு திறத்தாரால் மற்றொரு திறத்தாருக்கு விளையும் பரஸ்பர மான கஷ்டநஷ்டங்களை போக்கி அவர்களுக்குள்ளே சமாதானமும் ஒற்றுமையுணர்வும் ஏற்படுத்துதல் மிகவும் சிரமமான காரியம். இஃது வெறும் சாதாரண மனித யத்தனத்தால் ஏற்படுத்துதல் நிறைவேறக் கூடியதாகத் தோன்றவில்லை. உலகத்தில் இது வரையில்லாத புதிய தெய்வீக சக்திகள் கொண்ட அவதார புருஷர்கள் தோன்றினால் அவர்களே ஐரோப்பாவில் மூண்டிருக்கும் இந்தப் பெரிய விபத்துக்கு சமாதான வழிகளிலே நிவர்த்தி செய்யக்கூடும். "சென்ற இரண்டு நூற்றாண்டுகளில் ஐரோப்பியத் தொழிலாளர்கள் சிறிது சிறிதாகச் சம்பாதித்துக் கொண்டுவந்திருக்கும் உரிமைகளுடனே அவர்கள் திருப்தி கொண்டு இருக்க வேண்டும். இதுவரை அவர்களுக்குக் கிடைத்திருக்கும் உரிமைகளே மிகவும் அதிகம். இவற்றைக்கூட இன்னும் குறைத்தால் நல்லது. இப்படியிருக்க தொழிலாளி இன்னும் அதிகமான உரிமைகள் கேட்பதற்கு நாம் கொஞ்சமேனும் செவிசாய்க்கக்கூடாது" என்று பெரும்பான்மையான முதலாளிகள் நினைக்கிறார்கள். தொழிலாளர்களோ, அங்கு ராஜாங்க அதிகாரத்தைத் தமது வசமாகச் செய்துகொண்டாலன்றி அதாவது தங்கள் இஷ்டப்படி விநியோகிக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டாலன்றி, தங்களுக்கு முதலாளிகளிடமிருந்து நியாயம் கிடைக்க இடமில்லை என்று நினைக்கிறார்கள்.

எனவே இங்கிலாந்து முதலிய தேசங்களிலுள்ள தொழிலாளிகள் பார்லிமெண்ட் சபையில் தாம் ஆதிக்கம் பெற்று •அதன் மூலமாகத் தம்முடைய கட்சியாரே மந்திரிகளாகும் படியான நிலைமையை ஏற்பாடு

செய்துகொண்டு, இவ்வழியாலே ராஜ்யாதிகாரத்தையும் தம்முடையதாகச் செய்துகொள்ளும்படி மும்முரமான முயற்சிகள் செய்துவருகின்றனர். ஆனால் மேற்படி தேசங்களில் ராஜ்யாதிகாரம் இப்போது பெரும்பாலும் முதலாளிகளுக்குச் சார்பாக இருப்பதால், அந்த முதலாளிகள் தம்மால் இயன்ற வழிகளிளெல்லாம் தொழிலாளிகளைத் தலைதூக்க ஒட்டாமல் அழுத்திவிட முயற்சிசெய்து வருகிறார்கள். இதனால் அவ்விருதிறத்தாருள்ளே சமாதானமும் சிநேகிதத்தன்மையும் ஏற்படுவதற்கு வழியில்லாமல் நாளுக்கு நாள் மனஸ்தாபங்களும் அவநம்பிக்கையும் வயிற்றெரிச்சல்களும் மிகுதிப்பட்டுக்கொண்டுதான் வருகின்றன.''

நம் நாட்டில்

இவ்வாறு ஐரோப்பிய நிலையைப்பற்றிக் கூறும் பாரதி நம் நாட்டில் இத்தகைய நிலைமை ஏற்படுமுன் முதலாளி தொழிலாளி ஆகிய இருதரப்பினரும் சமரசம் செய்துகொள்ள வேண்டும் என விரும்பினார். அதற்காக தொழிலாளர் தமது உரிமைகளை விட்டுக்கொடுக்க வேண்டுமென முதலாளிகள் சார்பில் பாரதி வாதாடவில்லை. அதற்கு பதில் தொழிலாளர் கோரிக்கைகளை முதலாளிகள் ஒப்புக்கொள்ள வேண்டுமென்றே வற்புறுத்தினார்.

முதலாளிகளின் சொத்துரிமை தெய்வீகமானது என்று பாரதி கருதவில்லை. எல்லோருடைய நலன்களையும் பாதுகாக்கும்படியான அமைப்பு எதனையும் அவர் வரவேற்றார். உதாரணமாக ரஷ்யப் புரட்சி பற்றிய அவர் கருத்தை நாம் காட்டுவோம்.

தொழில் செய்து வாழ்தல்

''ருஷியாவில் அடுக்கடுக்காக நிகழ்ந்து வரும் புரட்சிகளின் காரணத்தால் அவ்விடத்து சைன்யங்

களில் பெரும்பகுதியார் தொழிற்கட்சியையும், அபேதக் கொள்கைகளையும், சார்ந்தோராகிவிட்டனர். இதினின்றும் அங்கு ராஜ்யாதிகாரம் தொழிற் கட்சிக்குக் கிடைத்துவிட்டது. தேசத்து நீதியனைத்தினையும் சகல ஜனங்களுக்கும் பொதுவாகச் செய்து எல்லோரும் தொழில் செய்து ஜீவிக்கும்படி விதித்திருக்கிறார்கள். தேசத்துப் பிறந்த சர்வ ஜனங்களுக்கும் தேசத்துச் செல்வம் பொது என்பது உண்மையாய்விடின் ஏழைகள் செல்வர் என்ற வேற்றுமைகளால் உண்டாகும் தீமைகள் இல்லாமற்போகும்படி சகலரும் தொழில் செய்துதான் ஜீவிக்கவேண்டும் என்ற விதி வழங்குமாயின் தேசத்துத் தொழில் மிகவும் அபிவிருத்தியடைந்து ஜனங்களின் க்ஷேமமும் சுகங்களும் மேன்மேலும் மிகுதியுறும்.

எனவே, ருஷியாவிலுள்ள அபேதவாதிகளுடைய கொள்கைகள் அவ்வளவு தீங்குடையனவல்ல."

இவ்வாறு தமது மனிதாபிமானக் கொள்கைக்கு சோவியத் நாட்டின் கொள்கைகள் பொருத்தமானவையே என்று பாரதி எண்ணினார். ஆனால் சோவியத் புரட்சியில் அளவற்ற பலாத்காரம் பயன்படுத்தப்பட்டது என்று பொய்ப்பிரசாரம் செய்த பிரிட்டிஷ் செய்தி ஸ்தாபனங்களின் செய்திகளின் மூலமே அவர் சோவியத் புரட்சியைப் பற்றிப் பாரதி தெரிந்து கொண்டிருந்தார். சோவியத் புரட்சி மக்களுக்குத் தீமை விளைவிக்கும் என்ற பிரசாரத்தை பாரதி நம்பாவிடினும், பலாத்காரத்தைப் பற்றித் தொடர்ச்சியாக வெளிவந்த செய்திகளை ஓரளவு நம்பத்தான் செய்தார். ஆகவே சாத்வீகமான முறையில் இம் மாறுதல் நம் நாட்டிலும் ஏற்பட வேண்டுமென விரும்பினார். பலாத்காரத்தால் தோன்றிய அரசு என்று அவர் நினைத்தபோதிலும் அவ்வரசின் கொள்கைகளைப் பன்

முறையும் அவர் வரவேற்றார். எனவே அவர் தொழிலாளிகள், ராஜ்யாதிகாரத்தை கைப்பற்றிக்கொண்டு தேசத்துச் சொத்துக்களை சமூக உடைமையாக்குவதை ஆதரித்தார்.

இதற்குச் சில உதாரணங்களை அவரது வசன நூல்களில் காணலாம்.

தேசத்தின் செல்வம் பொதுவுடைமை

சோவியத் பெப்ரவரி புரட்சியைப் பற்றி அது நடந்து, இரண்டொரு தினங்களுக்குள்ளாக பாரதி ஒரு உரையாடல் எழுதுகிறார். அப்புரட்சியின் விளைவாக ஜார் மன்னன் முடி துறந்தான். கெரன்ஸ்கி பதவிக்கு வந்தான். இந் நிகழ்ச்சியை சந்தோஷராயர், காளிதாஸருக்குச் சொல்லுகிறார். (காளிதாஸர், என்பது பாரதியின் புனை பெயர்.) அதைச் சொல்லும் சந்தோஷராயர், "பேச்சு சுதந்திரமில்லாமலும், தம்மிஷ்டப்படி அரசாண்டு வந்த ஜார் சக்கிரவர்த்திகளின் அதிகாரம் தொலைந்தது. ஜனங்களின் அதிகாரம் ஏற்பட்டது பற்றி உமக்கு சந்தோஷம் ஏற்படவில்லையா?" என்று பாரதியை கேட்கிறார். பாரதியார் "வாஸ்தவம்தான்" என்கிறார்.

ஸந்தோஷராயர் "எரி நட்சத்திரம் தோன்றினால் பூமி தூளாய் போய்விடுமா?" என்று கேட்கிறார். அதற்கு பாரதி பதில் சொல்லுகிறார். "இந்த பூமியில் இன்னும் நாமே நெடுநாளிருந்து பலவித நியாயங்கள் நடந்து நிறைவேறுவதைப் பார்க்கப் போகிறோம். பூமியில் நல்ல யுகம் தோன்றப் போகிறது. மனித ஜாதி முழுமைக்கும் விடுதலையுண்டாகப் போகிறது. நீர் சொல்லிய ருஷிய ராஜ்யப் புரட்சியானது, இனி வரப்போகிற நற் காலத்தின் முன்னடையாளங்களில் ஒன்று. பூமி தூளாகாது; மனிதர் ஒருவருக்கொருவர் செய்யும் அநீதி தூளாகும்."

குடிமக்கள் ஆட்சி

சில மாதங்களுக்குப் பின் நவம்பர் மாதம் 7-ம் தேதி போல்ஷவிக் புரட்சி வெற்றி பெற்றது. பாரதி 1917-ம் ஆண்டு மார்சு மாதம் எழுதிய தீர்க்கதரிசனம் உண்மையாகி விட்டது. அப்புரட்சியை வாழ்த்தி புதிய ருஷ்யா என்ற பாட்டை பாரதி எழுதினர். ஜாராட்சியின் கொடுமை ஒழிந்ததை வரவேற்றும் குடிமக்கள் ஆட்சி தோன்றியதை வாழ்த்தியும் பாரதி பாடினர்.

"குடிமக்கள் சொன்னபடி குடிவாழ்வு
மேன்மையுறக் குடிமை நீதி
கடியொன்றி லெழுந்ததுபார்; குடியரசென்று
உலகறியக் கூறி விட்டார்;
அடிமைக்குத் தளையில்லை யாருமிப்போது
அடிமையில்லை அறிக என்றர்;
இடிபட்டசுவர் போலே கலிவிழுந்தான்
கிருதயுகம் எழுக மாதோ."

சோவியத் ஆட்சியில் நிலத்தையும், பிற செல்வங்களையும், தேச உடமை ஆக்கியதை வரவேற்று செல்வம் என்ற கட்டுரையில் அவர் எழுதுகிருர். சோவியத் ஆட்சி ஏற்படு முன்னரே இத்தகைய கொள்கை அவருக்கு இருந்தது. அதனல் அது நடைமுறையில் வரும் என்ற நம்பிக்கை அவருக்கு இல்லை. ரஷ்யாவில் சோவியத் முறை ஏற்பட்ட பின் உலகம் முழுவதும் இம்முறை பரவும் என்று அவர் தீர்க்கதரிசனமாகக் கூறுகிருர்.

"செல்வத்தைக் குறித்த வேற்றுமைகளையும் இல்லாமற் பண்ணி விடவேண்டும் என்ற கொள்கையும் உலகத்தில் மிகத் தீவிரமாகப் பரவி வருகிறது. ஐரோப்பாவிலேதான் இந்த முயற்சி வெகு மும்முரமாக நடந்து வருகிறது. ஒரு தேசத்தில் பிறந்த மக்கள் அனைவருக்கும் அத் தேசத்தின் இயற்கைச் செல்வம்

முழுவதையும் பொது உடைமையாக்கிவிட வேண்டு மென்ற கொள்கைக்கு இங்கிலீஷில் "சோஷலிஸ்ட்" கொள்கை யென்று பெயர். அதாவது "கூட்டுறவு வாழ்வு"க் கொள்கை (சோஷலிஸ்ட்) ஐரோப்பாவில் தோன்றியபோது இதை அங்கு முதலாளிகளும் மற்றப்படி பொது ஜனங்களும் மிக ஆத்திரத்துடனும் ஆக்ரஹத்துடனும் எதிர்த்து வந்தார்கள். நாளடை வில் இக் கொள்கையின் நல்லியல்பு அந்தக் கண்டத் தாருக்கு மேன்மேலும் தெளிவுபட்டு வரலாயிற்று. எனவே இதன்மீது ஜனங்கள் கொண்டிருக்கும் விரோதம் குறைவு பட்டுக் கொண்டு வரவே, இக் கொள்கை மேன் மேலும் பலமடைந்து வருகிறது. ஏற்கனவே ருஷ்யாவில் ஸ்ரீமான லெனின், ஸ்ரீமான் மின்த்ரோஸ்கி முதலியவர்களின் அதிகாரத்தின் கீழ் ஏற்பட்டிருக்கும் குடியரசில் தேசத்து விளை நிலமும் பிற செல்வங்களும் தேசத்தில் பிறந்த அத்தனை ஜனங் களுக்கும் பொதுவுடைமையாக்கி விட்டது. இக் கொள்கை ஜெர்மனியிலும் ஆஸ்த்ரியாவிலும், துருக் கியிலும் அளவற்ற வன்மைகொண்டு வளருகிறது. ருஷ்யாவிலிருந்து இது ஆசியாவிலும் தாண்டி விட் டது. வட ஆசியாவில் பிரம்மாண்ட பகுதியாக நிற்கும் ஸைபீரியா தேசம் ருஷியாவின் ஆதிக்கத்தை சேர்ந்த தாதலால், அங்கும் இந்த முறைமை அனுஷ்டானத் திற்கு வந்து விட்டது. அங்கிருந்து இக் கொள்கை மத்திய ஆசியாவிலும் பரவி வருகிறது. ஐரோப்பாவி லுள்ள பிரான்ஸ், இங்கிலாந்து முதலிய வல்லரசுகள் இந்த முறைமை தம் நாடுகளுக்குள்ளும் பிரவேசித்து வரக்கூடும் என்று பயந்து அதன் பரவுதலைத் தடுக்கு மாறு பலவிதங்களில் பிரயத்தனங்கள் புரிந்து வரு கிறார்கள்."

இப் பிரயத்தனங்கள் வெற்றி பெறுது என்றே பாரதி நிச்சயமாக நம்பினர். "கான்யூட் ராஜா கடலைப் பார்த்துப் பின்னே போகும்படி ஆணையிட்டபோது கடல் பணிந்ததா?" என்று பாரதி கேட்கிறர். இன்று அவரது நம்பிக்கை நிறைவேறி விட்டதை நாம் காண்கிறேம்.

நவீன பாரதி அன்பர்கள் புரட்டு

பாரதி ரஷியாவைப் பற்றி எழுதியதெல்லாம் சோவியத் ஆட்சி தோன்றுவதற்கு முன்பு என்றும், பலாத்காரத்தால் தோன்றிய லெனினுடைய சோவியத் சர்க்காரை அவர் விரும்பவில்லை என்றும் சில "ஆராய்ச்சியாளர்கள்," எழுதி வருகிறர்கள். மேற்குறித்த கட்டுரையில் லெனின் பெயர் குறிப்பிடப்பட்டிருப்பதைக் காண்கிறேம். அது மட்டுமல்ல; சோவியத் சர்க்கார் செய்த திருமணச் சட்டத்தைப் பற்றியும், பணச் சீர்திருத்தச் சட்டம் பற்றியும் பாரதி தலையங்கம் எழுதியுள்ளார். இவற்றை மறைக்க "ஆராய்ச்சியாளர்கள்" முயன்று வருகிறர்கள்.

4. பெண் விடுதலை

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்
எட்டு மறிவினில் ஆணுக் கிங்கேபெண்
இளைப்பில்லை காணென்று கும்மியடி!
காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து
மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சி பெறச் செய்து வாழ்வமடி!

என்று பெண் விடுதலை பற்றிப் பாடியவர் பாரதி. பெண் விடுதலை வேண்டி நின்ற பாரதிக்கு, சோவியத்—திருமணச்

சட்டம் மாதருக்குவிடுதலையளித்தது கண்டு மனம் பூரித்தது. அதனை மனமார ஆதரித்துத் தலையங்கம் எழுதினர். அதன் ஓர் பகுதியை இங்கே தருவோம்.

சோவியத் ரஷியாவில் பெண் விடுதலை

"நவீன ருஷ்யாவில் விவாக விதிகள்: ருஷ்யாவில் ஜார் சக்கிரவர்த்தியின் ஆட்சி பெரும்பாலும் சமத்துவக் கட்சியார் அல்லது போல்ஷெவிஸ்டுக் கட்சியாரின் பலத்தாலே அழிக்கப்பட்டது. எனினும் ஜார் வீழ்ச்சியடைந்த மாத்திரத்திலே அதிகாரம் போல்ஷவிஸ்டுக் கட்சியார் கைக்கு வந்துவிடவில்லை. அப்பால் சிறிது காலம் முதலாளிக் கூட்டத்தார் கெரன்ஸ்கி என்பவரைத் தலைவராக நிறுத்தி ஒருவிதமான குடியரசு நடத்தத் தொடங்கினர்கள். ஆனல் கெரன்ஸ்கியின் ஆட்சி அங்கு நீடித்து நடக்கவில்லை. இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய தேச ராஜ்யங்களிடமிருந்து பல வகைகளிலும் உதவி பெற்ற போதிலும் கெரன்ஸ்கியால் தலைதூக்கி நிற்கமுடியவில்லை சில மாதங்களுக்குள்ளே கெரன்ஸ்கி தன் உயிரைத் தப்புவித்துக் கொள்ளும் பொருட்டாக ருஷ்யாவினின்றும் ஓடிப்போய் நேச வல்லரசுகளின் நாடுகளில் தஞ்சமென்று குடிபுக நேரிட்டது.

போல்ஷவிக் ஆட்சி ஏற்பட்ட காலத்தில் அதற்குப் பல வகைகளிலும் தோஷங்கள் கற்பிப்பதையே தம் கடமையாகக் கருதியவர்களிலே சிலர் அதன் மீது ராஜரீக நெறிகளிலே குற்றம் சாட்டியது போதாதென்று, போல்ஷவிஸ்ட் கட்சியார் ஸ்திரீகளையும் பொதுவாகக் கொண்டு ஒருத்தியைப் பலர் அனுபவிக்கிருர்களென்ற அபாண்டமான பழி சுமத்தினர்கள். ஆனல் "கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளுக்கு" ஒன்பதாம் நாள் உண்மை எப்படியேனும்

வெளிப்பட்டுத் தீரும். ஒருபெரிய ராஜ்யத்தைக் குறித்து எத்தனை காலம் பொய் பரப்பிக் கொண்டிருக்க முடியும்? சில தினங்களின் முன்பு இங்கிலாந்து தேசத்தில் மாஞ்செஸ்டர் நகரில் பிரசுரம் செய்யப்படும் மாஞ்செஸ்டர்கார்டியன் என்ற பத்திரிகை ருஷியாவின் விவாக விதிகளைப் பிரசுரம் செய்திருக்கிறது."

அவற்றைப் பார்க்கும்போது, நவீன ஐரோப்பிய நாகரிகம் என்று புகழப்படும் வஸ்துவின் நியாயமான உயர்ந்த பக்குவ நிலைமை மேற்படி போல்ஷவிஸ்ட் விவாகசம்பிரதாயங்களில் எய்தப்பட்டிருக்கிறதென்று தெளிவாக விளங்குகிறது. ஆண் பெண் இருபாலரும் பரிபூர்ண சமத்வ நிலையுடையோர், இங்ஙனம் இருபாலோரும் முற்றிலும் சமானம் என்ற கொள்கைக்குப் பங்கம் நேரிடாதபடி விவாகக் கட்டைச் சமைக்க வேண்டும் என்பதே ஐரோப்பிய நாகரிகத்தின் உண்மையான நோக்கம். பெண்களுக்கு விடுதலை, தாங்கள் வேறு பல ஜாதியார்களைக் காட்டிலும் அதிகமாகக் கொடுத்திருப்பதே—தாம் நாகரிகத்தில் உயர்ந்தவர்கள் என்பதற்கு முக்கியமான அடையாளங்களில் ஒன்றாகுமென்று ஐரோப்பியர்கள் சொல்லுகிறார்கள். அந்த வகையில் பார்த்தால் ஐரோப்பாவின் இதர பகுதிகளைப் பார்க்கிலும் நவீன ருஷியா உயர்ந்த நாகரிகம் பெற்றுள்ளதென்பது பிரத்யக்ஷமாய் விளங்குகிறது."

சோவியத் நாட்டில் பண-ஒழிப்பு

முதலாளித்துவ நாட்டில் பணத்தினால் முதலாளிகள் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். பணப்புழக்கம் தொழிலாளர்களுக்கு பல சங்கடங்களை விளைவிக்கிறது. தாமே பணமில்லாததால் பல அவதிகள் பட்ட பாரதி சோவியத்

ருஷியாவின் பணச் சீர்திருத்தச் சட்டத்தை "சோவியத் ருஷியாவில் பணம் தொலைத்தல்" என்ற வேடிக்கையான தலைப்போடு எழுதிய ஒரு கட்டுரையில் வரவேற்கிறார்.

இச் சட்டத்தின் ஷரத்துக்களை பாரதி குறிப்பிடுகிறார்.

(1) தொழிலாளிகளுக்கும், அவர்களுடைய, குடும்பத்தாருக்கும் உணவு இலாகாவால் கொடுக்கப் பட்ட முதலாவது இரண்டாந்தரத்து ஆகாரச் சீட்டு களுக்குத் தரப்படுவன உட்பட்ட எல்லாச் சாமான் களுக்கும் பணம் கொடுக்கும் முறையை ஒழித்துவிட வேண்டும்.

(2) ராஜாங்கத்துக்குரிய அல்லது நகரசபைக் குரிய வீடுகளில் குடியிருக்கும் தொழிலாளர், வேலை யாட்கள், அவர்களுடைய குடும்பத்தார்களிடமிருந்து பணவாடகை வாங்குவதை நிறுத்திவிடுவதும் அந்தச் சட்டத்தின் நோக்கம்.

(3) இவ்வாறே தொழிலாளருக்கும், வேலையாட் களுக்கும், சங்க ஸ்தாபனங்களுக்கும் முடிய மேற்படி இலாகாவால் கொடுக்கப்படும் அடுப்புக்கரி வகைகள் அனைத்திற்கும் பணக்கிரயம் கொடுக்கவேண்டியதில்லை என்றும், வாயு, மின்சாரம், டெலிபோன், நீர், சாக் கடை முதலியவற்றுக்கும் பணம் கொடுக்க வேண்டிய தில்லை என்றும் அச்சட்டம் நியமிக்கும்.

(4) ரயில்பாதை வழியாகப் போகும் சாமான் களுக்குத் தீர்வைப் பணம் வசூல் செய்யாமை, ஏறக் குறையப் பெரும்பான்மை ரயில்வே யாத்திரைக் கட் டணங்கள் வாங்குவதை நிறுத்திவிடுதல் முதலிய வற்றை நிறைவேற்றுவது.

(5) ரஷியாவில் குழந்தைகளுக்கு இனும் ஆகாரம் போடுவதற்கு ராஜாங்க உத்திரவு பிறப்பிக்

கப்பட்டது. "இவ்வாறு ஸர்வ விஷயங்களிலும் சோவியத் சர்க்கார் பணமில்லாதபடி செய்துவிடத் தீர்மானித்திருக்கிறார்கள்,"

இச்சீர்திருத்தத்தைப் பற்றி உலக முதலாளிகள், தங்களது கூலி எழுத்தாளர்கள் மூலம் பல புரட்டுகளைப் பரப்பிக்கொண்டிருந்தனர். பணம் அழிந்தால் உலகமே அழிந்துவிடும் என்று கயிறு திரித்தனர். ஆனால் பாரதி அதனால் விளையும் நன்மைகளை அறிந்து தமிழ் நாட்டு மக்களுக்கு அறிவித்தார். அச்சீர்திருத்தத்தை உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அறைகூவல் விடுத்தார்.

"உண்மையான புதுமை" என்ற தலைப்பில் அவர் எழுதினார் :

> "மனுஷ்ய நாகரிகத்தின் ஆரம்ப காலம்தொட்டே பணப்பழக்கம் இருந்துவருகிறது. இதனால் விளைந்த துன்பங்கள் எண்ணற்றன. அந்தப் பழக்கத்தை இப்போது மனித ஜாதியில் பத்திலொரு பங்கு ஜனத்தொகையை ஆளும் ராஜாங்கத்தார் திடீரென்று நிறுத்த உத்தேசித்திருக்கிறார்கள். இதனால் புதிய ஸௌகர்யங்கள் ஏற்படுவதுடன், பணப் பழக்கத்தால் இயன்று வரும் பழைய ஸௌகர்யங்களுக்கு இடையூறில்லாமல் செய்துவிடக் கூடுமானால் ருஷியாவை இவ்விஷயத்தில் உலகத்தார் பின்பற்ற முயல்வார்களென்பதில் ஸந்தேகமில்லை."

5. முடிவுரை

பாரதி தொழிலாளர் தோழன்

தொழிலை பாரதி மதித்தார், தொழிலாளிகளை 'பிரம தேவன் கலை' என்று அழைத்தார். "மேவிப் புவிமிசைக் காப்பவர் நீர்" என்று வாழ்க்கையின் ஆதார புருஷர்களாக அவர்களைப் போற்றினர். வெறும் புகழ்ச்சியோடு நின்றுவிடாமல் அவர்கள் தம் வாழ்க்கையில் முன்னேற்றம் காணச் செய்த நன்முயற்சிகளுக்கு ஆதரவு அளித்தார். அவர்களது கொள்கைகளை பிரசாரம் செய்யத் தன் எழுத்து வன்மையைப் பயன்படுத்தினர்.

அது மட்டுமல்ல, தொழிலாளர் அரசியல் அதிகாரத்துக்காகப் போராடுவது நியாயம் என்று விவாதித்தார்.

தொழிலாளர் அரசை வரவேற்ருர்.

அவ்வாறு அதிகாரத்தைக் கைப்பற்றி தொழிலாளி வர்க்கம் நிறுவிய முதல் அரசை வரவேற்ருர், வாழ்த்தினுர். தமது மனிதாபிமானச் சிந்தனைகள் அங்கு நிறைவேறுவதைக் கண்டு உள்ளம் பூரித்தார், தாம் கண்ட கனவுகள் தாம் நினைத்த முறையிலேயே நிறைவேருவிடினும், அடிப்படையில் சோவியத் சர்க்காரின் நடவடிக்கைகள் மனிதனது இன்பத்தையும், விடுதலையையும், நல்வாழ்வையும் ஆதாரமாகக் கொண்டவை என்பதை அவர் கண்டார்.

"பொய்க்கும் கலியைக் கொன்று பூலோகத்தார் கண்முன்னே
மெய்க்கும் கிருதயுகத்தினையே கொணர்வேன்"

என சூளுரைத்த கவிஞன், ஜாரின் வீழ்ச்சியைக் கண்டு, "கலிவிழுந்தான், கிருதயுகம் எழுக மாதோ!" என்று வாழ்த்தினுர்.

சோஷலிஸத்தின் நண்பர்

தனியொருவனுக்கு உணவில்லை யெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்

என்று ஆவேசமாகச் சாடிய கவி, பணம் தொலைந்து எல்லோருக்கும் உணவு அளிக்கும் சமுதாய நியதியை வரவேற்ருர்.

"பயிற்றி உழுதுண்டு வாழ்வீர் பிறர் பங்கைத்
திருடுதல் வேண்டாம்"

என்று நீதி கூறி, சோவியத் ருஷியாவில் நிலமும், தேசச் சொத்துக்களும் சமூக உடைமையானதைக் கண்டு தமது கனவு நிறைவேறுவதாக எண்ணி மகிழ்ச்சி கொள்

கிறார்: எல்லோரும் உழைத்துப் பிறர் பங்கைத் திருடாமல் வாழும் சமுதாயம் அங்கு மலர்கிறது என்று அவர் உறுதியாகக் கூறினர்.

பாரதி தொழிலாளி-மனிதாபிமானி-புரட்சிஎழுத்தாளர்

பாரதியின் மனிதாபிமானம் மனிதர் துன்பம் கண்டு சாம்புவதல்ல, அவர்கள் துன்பம் போக்கச் செய்யும் முயற்சிகளுக்கு ஆதரவளித்து அவர்களது புரட்சிக்குரலாக ஒலிப்பதே அவரது மனிதாபிமானம் இது புரட்சிகரமான மனிதாபிமானம்:

அவர் தொழிலாளர் தோழர்.

அன்று அவர் தம்மையே தொழிலாளியாகவே கருதினர். தொழிலாளிகளோடு ஐக்கியமடைந்தவர்.

"நமக்குத் தொழில் கவிதை" என்று பாடிய பாரதி. தொழிலாளர் வரிசையில் தம்மையும் சேர்த்துக் கொள்கிறார்'' அரும்பும் வியர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவோர்'' என்று தாம் அழைக்கும் தொழிலாளரில் கவிஞராகிய தாமும் ஒருவர் என்று பெருமையோடு சொல்லிக் கொள்ளுகிறார்.

இரும்பைக் காய்ச்சி உருக்குபவனும் இயந்திரத் தொழிலாளியும், சர்க்கரை ஆலைத் தொழிலாளியும், கடலில் மூழ்கி முத்து எடுக்கும் தொழிலாளியும், குயவனும், தச்சனும், உழவனும், ஆடுமாடு பராமரிப்பவனும், ஆடை நெய்பவனும் சமூகச் செல்வத்தை படைக்கிறார்கள். ஆகவே அவர்கள் உலக வாழ்க்கையின் காவலர்கள். அவர்களுக்கு உற்சாகமூட்ட, அவர்கள் பண்பாட்டில் உயர, அவர்கள் வாழ்க்கையில் இன்பம் சேர்க்கக் கவிஞனும், கலைஞனும் உழைக்க வேண்டும். எனவே பாரதி அவர்களைத் தொழிலாளிகள் என்றே கூறுகிறார். இவர்கள் வாழ்க்கையை வளம்படுத்த புதிய புதிய விஞ்ஞான உண்மைகளைக் கண்டு விளக்கும் விஞ்ஞானிகளும் தொழிலாளிகளே. தொழில்

செய்யாதவன் வீணன். இப்புரட்சிகரமான கருத்தை தமிழ் நாட்டுக்குப் பாரதி போதித்தார்.

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே
பரத நாட்டியக் கூத்திடு வீரே.
காட்டும் வையப் பொருள்களின் உண்மை
கண்டு சாத்திரம் சேர்த்திடு வீரே
தேட்ட மின்றி விழியெதிர் காணும்
தெய்வமாக விளங்குவிர் நீரே!

தொழிலாளியை மாண்புடையவனாக இவ்வுலகச் செல்வங்களைப் படைக்கும் படைப்பாளியாக 'இயற்கையை வெல்லும் வலிமையுடையவனாகப் பாரதி காண்கிறார். அவனை நேசிக்கிறார் அவனது சிறுமையை போக்க கசையடி கொடுக்கிறார். அவன் முன்னேறும்போது வாழ்த்துகிறார்.

தொழிலாளி வர்க்கம் முழுவதும் முன்னேறுவது ஒரு புதிய சமுதாயத்தை அமைப்பதற்காகத்தான் என்பதை பாரதி மிகத் தெளிவாக உணர்ந்து அவர்கள் முன்னேற்றத்தை ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வரவேற்று ஆதரவளித்தார்.

"உலகத்தை மாற்றும் சக்திகளின் தலைமையில் நின்று அச்சக்திகளுக்கு வசப்படாமல் ஒதுங்கும் மக்களைக் கசையடி கொடுத்து முன்னேற வைப்பதே ஒரு கவிஞன் கடமை" என்று தமது கடமை குறித்து ரோமாய்ன் ரோலாந்து என்ற முற்போக்கு ஆசிரியர் கூறுகிறார். "I march at the Vanguard of the forces tending to charge the world for the better and lash laggards to fall in true. There is no higher took for a poet than this."

இவ் வரையறைக்கு உதாரணமாகத் திகழ்பவர் பாரதி.
புரட்சிக் கவிஞன் பாரதி வாழ்க!
உலக மக்கள் கவிஞன் பாரதி வாழ்க
பாரதியின் சிந்தனைகள் வளர்க!

அச்சிட்டது மெட்ரோபாலிட்டன் பிரிண்டர்ஸ் சென்னை-2.